செ.வெ.எண்: 90/2017 நாள்: 01.02.2017

# பத்திரிக்கைச் செய்தி

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களை பதிவு செய்வதை ஊக்குவிப்பதற்காக எளிதான ஒரு பக்க பதிவறிக்கையை இணையதளம் மூலமாக பதிவு செய்து ஒப்புகை பெற "உத்யோக் ஆதார் மெமோரண்டம்" என்ற பதிவு முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே தொழில் நடத்தும் மற்றும் புதிய குறு, சிறு மற்றும் நடுத்தர நிவனங்கள் தங்கள் நிறுவனங்களின் தகவல்களை தாமே பதிவேற்றம் செய்து ஒப்புகையை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணையதளத்தில் பதிவு செய்து ஒப்புகை பெறுவதற்கு எவ்வித கட்டணமும் செலுத்த தேவையில்லை மற்றும் குறிப்பிட்டக் காலக் கெடு ஏதுமில்லை.

தொழில் துவங்க விரும்பும் தொழில் முனைவோர் இப்பதிவறிக்கையை பெற இயலாது மற்றும் இப்பதிவறிக்கை ஏற்கனவே நடைமுறையில் இருந்து வந்த தொழில் முனைவோர் பதிவறிக்கை-I (EM Part-I) மற்றும் தொழில் முனைவோர் பதிவறிக்கை- II (EM Part-II) ஆகியவற்றுக்கு மாற்றாகக் கொண்டு வரப்பட்டுள்ளது.

சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மத்திய, மாநில அரசின் திட்டங்களின் பயன்களை பெறுவதற்கு உத்யோக் ஆதார் எண் கட்டாயமாகிறது. எனவே மேற்கண்ட நிறுவனங்கள் தத்தமது நிறுவனங்களின் விபரங்களை www.udyogaadhaar.gov.in என்ற அரசின் இணையதளத்தில் பதிவு செய்து "உத்யோக் ஆதார் பதிவறிக்கையை பதிவிறக்கம் செய்து அரசு திட்டங்களின் பயன்களை பெறலாம் என கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவிக்கிறார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.